தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம் (இ) ஸ்ரீவில்லிபுத்தூர்.
முன்னிலை – திரு.மு.வீரணன், எம்.ஏ.,எல்.எல்.எம்.,
தலைமை நீதித்துறை நடுவர், ஸ்ரீவில்லிபுத்தூர்.
2025 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 5 ம் தேதி செவ்வாய்க்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.818/2025
(CNR No.TNVR02-009125-2022)

அரசுக்காக,
மருந்துகள் ஆய்வாளர்,
விருதுநகர் சரகம். ... குற்றமுறையிடுபவர்

–எதிர்–

திரு. V. சுப்பிரமணியன்,
த/பெ. S. வேலாயுதம்,
உரிமையாளர், திருவாளர் அரவிந்த் மெடிக்கல்ஸ்,
எண்.121V, தரைத்தளம், செயின்ட் பிரான்சிஸ் சேவியர் வணிக வளாகம்,
இராமகிருஷ்ணாபுரம், பைபாஸ் ரோடு,
குன்னான்குளம், வடக்குத்தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர் – 626 125,
விருதுநகர் மாவட்டம்.
... குற்றம்சாட்டப்பட்டவர்/எதிரி

இவ்வழக்கு 22.07.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று விசாரணைக்கு வந்த போது அரசுக்காக அரசு குற்றத்துறை கூடுதல் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.C.S.கருப்பசாமி அவர்கள் ஆஜராகியும் வழக்கின் அனைத்து கோப்புகளை பரிசீலனை செய்து இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

1) கடந்த 08.01.2022 ம் தேதியில் எதிரி, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், குன்னான்குளம், வடக்குத்தெரு, இராமகிருஷ்ணாபுரம், பைபாஸ் ரோடு, செயின்ட் பிரான்சிஸ் சேவியர் வணிக வளாகம், தரைத்தளம் எண்.121V என்ற முகவரியில் நடத்தி வரும் திருவாளர் அரவிந்த் மெடிக்கல்ஸ்–ஐ நிகழ்நிலை புகார்தாரரான விருதுநகர் சரக மருந்துகள் ஆய்வாளர் ஆய்வு செய்த போது, எதிரியானவர், பதிவு பெற்ற மருந்தாளரின் மேற்பார்வையில்லாமலும், மருந்துச்சீட்டு பதிவேடு முறையாக பராமரிக்கப்படாமலும்,

செடியூல் "H" வகை மருந்துகளை மருந்துச் சீட்டுக்கு இணங்காமலும் சில்லரையாகவும் மருந்துகளை விற்பனை செய்திருந்தார் என்றும், எனவே குற்றம்சாட்டப்பட்டவர்/எதிரியின் செயல் மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(3)(1), பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(4)(3)(i), பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(9)(a)ன் படி குற்றமாகும் என்றும், எனவே குற்றம்சாட்டப்பட்டவர்/எதிரி மேற்படி சட்டம் பிரிவு 27(d)ன் படி தண்டனைக்குரியவர் என்று விருதுநகர் சரக மருந்து ஆய்வாளர் தனிப்புகாரினை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்காவணங்களின் நகல் வழங்கப்பட்டு போதிய காலஅவகாசத்திற்கு பின்னர், எதிரியின் மீதான மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(3)(1), பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(4)(3)(i), பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(9)(a)ன் படி குற்றமாகும் என்றும், எனவே குற்றம்சாட்டப்பட்டவர்/எதிரியிடம் மேற்படி சட்டம் பிரிவு 27(d)ன் படி குற்றம் குறித்து கேள்வி கேட்ட போது எதிரி தம்மீதான குற்றத்தை தன்னிச்சையாக ஒப்புக்கொள்வதாக கூறி ஒரு குற்ற ஒப்புதல் மனுவை தாக்கல் செய்தார்.

3) எனவே எதிரி தம்மீதான குற்றத்தை தன்னிச்சையாக ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததிலிருந்தும், எதிரியின் செயலானது மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(3)(1), பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(4)(3)(i), பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(9)(a)ன் படி குற்றமாகும் என்றும், எனவே குற்றம்சாட்டப்பட்டவர்/எதிரி மேற்படி சட்டம் பிரிவு 27(d)ன் படி தண்டனைக்குரிய குற்றம் விளைவித்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுவதால், எதிரியின் குற்ற ஒப்புதல் மனுவினை அனுமதித்து எதிரிக்கு மேற்படி பிரிவுகளின் கீழ் தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

4) எதிரி தரப்பில் எதிரி தான் முதன்முதல் குற்றவாளி என்றும், எதிரியின் வியாபாரம் பாதிப்படைந்துள்ளது என்றும், அதனால் மிகவும் குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு தெரிவித்துள்ளதையும் எதிரி வரும் காலங்களில் இது போன்ற விதி மீறல்களில் ஈடுபட போவதில்லை என்று எடுத்துரைத்ததினை கருத்தில் கொண்டும், எதிரியின் வயதினை கருத்திற்கொண்டும், எதிரிக்கு தண்டனை வழங்குவதில் கருணை காட்டலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

5) முடிவில், எதிரி, மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(3)(1), பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(4)(3)(i), பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(9)(a)–ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து எதிரிக்கு மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(3)(1) –இன் கீழான குற்றத்திற்கு மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 27(d) ன் கீழ் நீதிமன்றம் கலையும் வரை சிறைதண்டனையும், அபராதம் ரூ.25,000/– கட்டத்தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைதண்டனையும், பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(4)(3)(i)ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 27(d) ன் கீழ் நீதிமன்றம் கலையும் வரை சிறைதண்டனையும், அபராதம் ரூ.25,000/– கட்டத்தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைதண்டனையும், பிரிவு 18(c) உடன் இணைந்த விதி 65(9)(a)ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 27(d) ன் கீழ் நீதிமன்றம் கலையும் வரை சிறைதண்டனையும், அபராதம் ரூ.25,000/– கட்டத்தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைதண்டனையும், கு.வி.மு.ச பிரிவு 252 ன் படி தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி மீதான தண்டனை தீர்ப்பு குறித்து ஏதேனும் ஒரு தினசரி தமிழ் நாளிதழில் எதிரியின் செலவில் விளம்பரம் செய்து, நாளிதழின் நகலினை 15 நாட்களுக்குள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் மருந்தாய்வாளருக்கு உத்தரவிடப்படுகிறது. சிறைதண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ.75,000/–

6) இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சரிடம் கூறப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் 2025 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 5 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

M VEERANAN
Digitally signed by M VEERANAN
Date: 2025.08.05 15:57:45 -0400

தலைமை நீதித்துறை நடுவர்,
விருதுநகர் மாவட்டம் (இ)
ஸ்ரீவில்லிபுத்தூர்.

குறிப்பு
வழக்கின் முடிவு பற்றி மருந்து கட்டுப்பாட்டு துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.